இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, 104–வது வார்டிலே இருக்கின்ற 168 குடியிருப்புகளைப் பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அந்த 168 குடியிருப்புகளும், தொழில்நுட்பக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு, அந்தக் குழு, அந்தப் பகுதியில் இருக்கின்ற வீடுகள் இடித்து கட்டப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கின்றது. அதன்மீதும் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

தீக்காய சிகிச்சைப் பிரிவு

***7893—திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டையில் தீக்காய சிகிச்சைப் பிரிவுடன் மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அடுத்த கேள்விக்குச் சென்று விட்டேன், உட்காருங்கள். அடுத்த கேள்வியின்போது பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மணி 10–47 ஆகின்றது. இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

2017 ஜூன் 16]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை பகுதி இப்பொழுதுதான் வருவாய்த் துறையிலே புதிய தாலுகாவாக. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் அவர். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டிருந்தால், உங்களுக்குக்கூட பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கலாம். அவரே 2 கேள்விகளுக்கு 10 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார். பிறகு என்ன செய்யச் சொல்கிறீர்கள் என்னை? (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை புதிய தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கு ஏற்கெனவே செயல்படக்கூடிய அந்த மருத்துவமனையை, இனி 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகக் கட்டுவதற்கு நிதியொதுக்கப்பட்டு* tender *எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. அதோடு சேர்த்து தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலே சிவகாசி அரசு மருத்துவமனை உள்ளது. அது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே* Centre of Excellence for burns *அதாவது ஒரு தகைசால் மையமாக தீக்காயப் பிரிவுக்கென சிறப்பாக உருவாக்கப்பட்டு, நல்லமுறையிலே செயல்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் இமயம் முதல் குமரி வரை மாபெரும் மக்கள் தலைவியாய், வான்புகழ் பெற்று வங்கக் கடலோரம் புரட்சித் தலைவர் நினைவிடத்தில் துயில் கொண்டிருக்கும் மாசற்ற மங்கையர்க்கரசி, எங்கள் உள்ளமெல்லாம் நீங்கா இடம் பெற்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி*

அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கழகத்தினுடைய பொதுச் செயலாளர் தியாகத் தலைவி சின்னம்மா அவர்களுக்கும், கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய அருமை அண்ணன் டி.டி.வி. தினகரன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெம்பக்கோட்டை தனி தாலுகாவாக மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலேயே அதிகமாக வெம்பக்கோட்டையைச் சுற்றிலும் சுமார் 200-க்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன. அடிக்கடி பட்டாசு விபத்துகள் ஏற்படுவதால் சிகிச்சை பெறுவதற்கு சிவகாசிக்கு 25 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் உயிர் இழப்பு ஏற்படும் சூழ்நிலையும் உருவாகி வருகிறது. ஆகவே, வெம்பக்கோட்டையில் தீக்காய சிகிச்சைப் பிரிவுடன்கூடிய அரசு மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று தங்களிடத்திலே கோரிக்கையாக வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆம் தேதிதான் அந்தத் தாலுகா மருத்துவமனைக்கான டெண்டர் பணிகளெல்லாம் முடிந்திருக்கிறது. அங்கு 60 படுக்கை வசதிகள் கொண்ட புதிய பிரிவு உருவாக்கப்படுகிறது. அதிலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கேற்ப விபத்துகளைக் கருத்திலே கொண்டு, தீக்காயப் பிரிவும் தொடங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூன் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக ஒரு தகவல். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு புதிய பல் மருத்துவக் கல்லூரியை தங்களுடைய மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள் என்கிற கூடுதல் தகவலையும் இந்த நேரத்திலே நான் நன்றியோடு பதிய வைக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாத்தூர் அரசு மருத்துவமனை, சென்னை–குமரி நான்குவழிச் சாலையில், விருதுநகருக்கும் கோவில்பட்டிக்கும் நடுவிலே அமைந்துள்ளது. அங்கு அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, சாத்தூர் அரசு மருத்துவமனையில் digital X–ray வசதியுடன் கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, இப்போது அனைத்து மாவட்ட தலைநகரங்களுக்கும் ஏற்கெனவே இருக்கக்கூடிய equipments உடன் high end equipments, digital X–ray வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி தாலுகாவிலே தீவிர தீக்காய சிகிச்சைப் பிரிவு அமைத்துத் தர இயலுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை ரீதியாக உரிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் திருவாலங்காடு ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார மையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாலங்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தில், ஏற்கெனவே 2, 3 முறை அந்தப் பகுதியிலே காய்ச்சல் வந்தபொழுது நாங்கள் ஆய்வு செய்தோம். அந்த ஆய்விலே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது கண்டறியப்பட்டது. ஆகையினாலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைக் கனிவோடு இந்த ஆண்டு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

வாழை ஆராய்ச்சி நிலையம்

***7926—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—